### அத்தியாயம் 3

# பிரிவினையினால் உண்டாகும் உள்ளார்ந்த பாதிப்புகள்

கொரிந்து பட்டணத்திலிருந்த கிறிஸ்தவர்களுக்கு இடையிலான பிரிவினைகள், உலக ஞானத்தின் மீது வைக்கப்பட்ட தவறான நம்பிக்கைக்கு ஒரு எடுத்து காட்டாக விளங்குகிறது. கொரிந்துவில் நிலவியிருந்த இந்த முட்டாள்தனமான ஞானமானது தேவ ஞானத்திற்கு எதிராக நிலை கொண்டிருந்தது, ஆனால், அஞ்ஞானிகளைவிட உலக ஞானத்திலே இவர்கள் மோகம் கொண்டிருந்தே சபையினால் உள்ள பிரச்சனைகளினால் உண்டான கொந்தளிப்பு காரணமாகும். அவர்கள் மாம்சீகத்திலும் உலகத்தின் மீதும் கொண்டிருந்த பற்றே அவர்களுக்குள் உண்டான பிரிவினை ஆவிக்கு காரணமாக இருந்தது. இந்த கிறிஸ்தவர்களில் சிலர், கிறிஸ்துவின் (ஆவி) தங்கள் இருதயங்களை ஆழ இடம் கொடாமற் போனார்கள் தங்கள் மனதிலே பிறர் மீது அற்பமான பொறாமை கொண்டு, தங்கள் கௌரவத்தைக் காத்துக்கொள்ள, தங்கள் மனம் விரும்பிய போதகரை தெரிந்து கொண்டு அந்த பிரிவினரோடு சேர்ந்து கொண்டனர்.

இவ்வாறு, சிறுப்பிள்ளைத்தனமாக கிறிஸ்தவ வாழ்க்கை வாழ எத்தனித்தபடியால், சுத்த சுவிசேஷம் கோரும் வாழ்க்கை முறைமையின்படி வாழ பெலனற்று வழி தப்பிப் போனார்கள். கிறிஸ்துவின் சிலுவையின் அடையாளமாக உள்ள தேவ கிருபையை புறந்தள்ளி, தாங்கள் சார்ந்திருந்த பிரிவினருக்கே விசுவாசம் காண்பித்தார்கள் இப்படி அவர்கள் தங்கள் பரிசுத்த வாழ்க்கையை சமரசம் செய்து கொண்ட படியால் சகோதர சிநேகத்தை அசட்டை செய்தார்கள்.

### பிரிவினை: மாமிச சிந்தையின் கனி (3:1-9)

**1மேலும், சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்துக்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப்**

**பேசவேண்டியதாயிற்று. [2]நீங்கள் பெலனில்லாதவர்களானதால், உங்களுக்குப் போஜனங்கொடாமல், பாலைக் குடிக்கக் கொடுத்தேன்; இன்னமும் நீங்கள் மாம்சத்துக்குரியவர் களாயிருக்கிறபடியால், இப்பொழுதும் உங்களுக்குப் பெலனில்லை. [3]பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்திற்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா? [4]ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், வேறொருவன் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நீங்கள் மாம்சத்திற் குரியவர்களல்லவா? [5]பவுல் யார்? அப்பொல்லோ யார்? கர்த்தர் அவனவனுக்கு அருள் அளித்தபடியே நீங்கள் விசுவாசிக்கிறதற்கு ஏதுவாயிருந்த ஊழியக்காரர்தானே. [6]நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான், தேவனே விளையச்செய்தார். [7]அப்படியிருக்க, நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை, விளையச் செய்கிற தேவனாலே எல்லாமாகும். [8]மேலும் நடுகிறவனும் நீர்ப்பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக்கிறார்கள்; அவனவன் தன்தன் வேலைக்குத் தக்கதாய்க் கூலியைப் பெறுவான். [9]நாங்கள் தேவனுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறோம்; நீங்கள் தேவனு டைய பண்ணையும், தேவனுடைய மாளிகையுமாயிருக்கிறீர்கள்.**

**வசனம் 1.** கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய வரங்களை பெருமளவில் மதித்து, ஆவிக்குரிய செய்திகளை அசட்டை செய்தபடியால் (12:7-10), அவர்கள் ஒரு வித்தியாசமான மனபாங்குடையவர்களாக இருந்தனர். **ஆவிக்குரிய** மனிதரோடு **பேசுவது** போல், பவுலால் இவர்களோடு பேச முடியவில்லை. அவர்கள் கிறிஸ்துவுக்குள் **குழந்தை**களாயிருந்தபடியால், மாமிசசிந்தையுள்ளவர்களோடு இடைபடுமளவிற்கு பவுல் தன்னைத் தாழ்த்திக் கொண்டார். சிறு பிள்ளைத்தனமாக, தங்களை பிரிவினைகளிலும் பிரச்சனைகளில் ஈடுபடுத்திக் கொண்டிருந்த வர்களோடு பவுல் பேசிக் கொண்டிருந்த போதிலும் அவர்கள் இன்னும் “கிறிஸ்துவுக்குள் இருந்தனர்.” கிறிஸ்துவைப் போன்றே, பவுலும் இவர்களைக் குறித்து நம்பிக்கை இழக்கவில்லை. பிரிவினைகளோடு போலித்தனமான மடைமைகளோடு உலக ஞானத்தின் படி நடக்கிறவர்களாய் கொரிந்தியர்கள் இருந்த போதிலும், அவர்கள் ஏதோ ஒரு வகையில், “ஆவிக்குரிய மனிதர்கள்” தான். ஆவியானவர் அவர்களுக்கு போதித்து புத்தி சொல்லி பெலப்படுத்திக் கொண்டிருந்தார்; ஆவியானவரை ஏற்றுக்கொண்ட போதிலும், மாம்சீகம் அவர்களில் மீண்டும் தலையெடுத்தது. பவுல், இனி அவர்களை ஆவிக்குரியவர்கள் என்று அழைக்கக்கூடாத அளவுக்கு மாம்ச சிந்தைக்கு அடிமைப் பட்டிருந்தனர்.

நூதனமான மொழியைப் பேசுவதினாலேயோ அல்லது ஆவியானவரின் ஏவுதலின்படி உண்டான உள்ளுணர்வினாலோ இவர்கள் ஆவிக்குரியவர்கள் என்று பவுல் எந்த கருத்தையும் பதிவு செய்யவில்லை. பவுல், கொரிந்து சபையின் கிறிஸ்தவர்களோடு ஆவிக்குரிய வண்ணமாக பேச வேண்டுமானால், அவர்கள் முதிர்ச்சி அடைந்திருக்க வேண்டும். போலியான குதர்க்கவாதிகளால் வரையறுக்கப்பட்ட ஞானத்தில் மயங்காதிருப்பவனே, முதிர்ச்சிக்கு அடை யாளமாகும். எந்த அளவிற்கு சிலுவையைப் பற்றிக் கொண்டு கிறிஸ்து தேவன் என்று அறிக்கை செய்து அவரை சேவிக்கிறார்களோ, அந்த அளவிற்கு முதிர்ச்சியற்ற வழிகளை விட்டு விலகுவர். தாங்கள் எந்த பிரிவினரோடு சேரவிருக்கிறார்கள் என்பதை உணர்ச்சி வசப்படாமல் தேர்ந்தெடுக்கும் அளவிற்கு அவர்கள் முதிர்ச்சி அடைந்திருக்க வேண்டும் என்றே பவுல் விசுவாசிகளிடம் எதிர்பார்க்கிறார்.

**வசனம் 2.** ஒரு பெண்ணுக்குரிய தன்மைகளைக் கொண்டு தன்னை உருவகப்படுத்திக் கொள்ள பவுல் தயங்கியதில்லை. தெசலோனிக்கேயா சபைக்கு அவர் ஒரு தாதியாக இருந்தார் (1 தெச. 2:7; KJV); கொரிந்து சபைக்கு ஒரு தாயைப் போல **பாலைக் குடிக்கக்** கொடுத்தார். பவுலினுடைய 18 மாத ஊழியத்திற்கு பின் (அப். 18:11) ஏறக்குறைய 3 வருடங்கள் கழிந்து விட்டன. அவர் அங்கிருந்த நாட்களில், கிறிஸ்தவ கோட்பாடுகளை அஸ்திபார மிட்டார். அவர், “கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப்” பற்றிய விசுவாசத்தை (1 கொரி. 2:2), “செத்த கிரியைகளுக்கு நீங்கலாகி மனந்திரும்புதலுக்கும்,” “மரித்தோரின் உயிர்த்தெழுதல்,” மற்றும் “நித்திய நியாயத்தீர்ப்பு” (காண்க எபி. 6:1, 2) போன்ற உபதேசங்களுக்கும் கொரிந்தியர்களை அறிமுகப் படுத்தினார். அவர்கள், ஆவிக்குரிய பிரயாணத்தில், சொற்ப விசுவாசமுள்ளவர்களும் கிறிஸ்துவில் குழந்தைகளுமாயிருந்தனர். அடிப்படையான, சுவிசேஷத்தின் ஞானப்பாலை அவர்களுக்கு ஊட்டியிருந்தார். அவர்கள் வளருவதற்கு நல்ல சூழல் இருந்த போதிலும் சபையின் ஒற்றுமையை வலுவற்றதாக்கும் காரியங்களால் வழி விலகிச் சென்று, கிறிஸ்துவுக்குள் வளர்ச்சி இல்லாமல் போனார்கள்.

அடிப்படை சுவிசேஷத்தின் கோட்பாடுகளை பிரதிபலித்து வாழவேண்டும் என்று கொரிந்தியர்களுக்கு அறிவுரை கூறினார். கிறிஸ்துவின் உபதேசம், மனிதனுடைய கேள்வி ஞானத்தைத் தூண்டி அவனுடைய பகுத்தறியும் திறனை கட்டுப்படுத்த ஆற்றல் உடையது. அதின் நீதி நெறிகளின் தாக்கம் அவனை உய்த்து தன்னைத்தானே பரிசோதித்து மனம்திரும்புதலுக்கு வழி வகுக்கும். விசுவாசத்தின் திட உணவுகளை செரிக்கும் அளவுக்கு கொரிந்திய கிறிஸ்தவர்கள் பெலமுள்ளவர்களாக இல்லை. அவர்களிலுள்ள மாம்ச சிந்தை,

அவர்களை கிறிஸ்துவுக்குள் வளர விடாமல் செய்தது. தற்போது **நீங்கள் பெலனற்றவர்களாயிருக்கிறீர்கள்** என்று அவர்களுக்கு பவுல் கூறினார், எனினும் முதிர்ச்சியற்ற வழிகளை விட்டு விலகுமாறு அறைகூவல் விடுத்தார். விசுவாசத்தை உள் வாங்கி அதன் மூலம் பரிசுத்த வாழ்வு வாழுமாறு அவர்களை ஊக்குவித்தார்.

**வசனம் 3.** ஆவியானவரால் நடத்தப்படுவதற்கு பதிலாக (*pneumatikoi*; 3:1), மாமிச சிந்தைக்கே அடிமைப்பட்டிருக்கிறார்கள் (*sarkikoi*; 3:3). என்று கொரிந்தியர்களைப் பவுல் சாடினார். எசோட்டரிக் ஞானத்தில் அக்காலத்தில் இந்த தத்துவமானது சிலர் மட்டுமே புரிந்து கொள்வர். மற்றவர்களுக்கு அது மறைபொருளாக இருக்கும். மயங்கினவர்களையே அவர் சாடினார். இவர்கள், தங்களை முதிர்ச்சி அடைந்த ஆவிக்குரியவர்கள் என்று நினைத்தனர். ஆயினும், பவுல், இவர்கள் இன்னும் மாமிசத்திற்குரிய வர்கள்தான் என்று நிரூபித்தார். அவர்களுக்குள் நிலவிய **பேதகங்களும் பொறாமைகளுமே** அவர்கள் முதிர்ச்சியின்மைக்கு அடையாளம் என்று பவுல் கூறினார்.

பவுல், மற்றும், புதிய ஏற்பாட்டை எழுதிய அநேகர் “மாம்சீகம்” (σάρξ, *sarx*) என்ற பதத்தை, மனிதனின் இருதயத்தில் மறைந்திருக்கும் பாவ இச்சைகளை குறிப்பிடவே பயன்படுத்தினர். இந்த இச்சைகள், ஒருவரில் மறைவாகவோ அல்லது வெளிப்படையாகவே வெளிப்படுத்தப்படும். மாம்சீகம், “பாவத்தன்மையை இயங்க வைக்கும் ஆற்றல்”[1] என்று ஜெ. எ. மோட்யர் எழுதியுள்ளார். ஞானத்தை யார் கண்டடைந்தனர் என்று தங்களுக்குள்ளே போட்டியிட்டுக் கொண்டு அற்பமான ஆரவாரம் செய்யும் வரை, அவர்களை தேவனுக்குள் நடத்துவது என்பது பவுலுக்கு கடினமான காரியமாகும். அவர்கள் ஆவிக்குரியவர்களாய் அல்லாமல், தங்களை மாமிசத்துக்குரியவர்கள் என்று வெளிப்படுத்தின விதம், பவுலை ஆச்சரியத்திற்குள்ளாக்கினது. ஆரம்ப காலங்களில் அவர்கள் மாமிசத்துக்குரியவர்களாக இருந்தனர். கிறிஸ்துவுக்குள் மறுப்பிறப்படைந்த துவக்கத்தில் அவர்கள் எளிதில் புரியக்கூடியவர்களாக இருந்தனர். தற்போது, சில வருடங்கள் சென்ற பின், முதிர்ச்சி என்பதை பவுல் அவர்களிடம் அவ்வளவாக எதிர் பார்க்கவில்லை. அவர்களிருக்கும் சூழ்நிலை யிலிருந்து சிறிது வெளியே வந்து தங்களை தாங்களே நிதானிக்கும் படியாக அவர், அவர்களைக் கேட்டுக் கொண்டார். **நீங்கள் மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்கள் அல்லவா?** என்று கேட்டார்.

**வசனம் 4.** யதார்த்தங்களை கொண்டு பவுல் கொரிந்திய கிறிஸ்தவர்களை எதிர் கொண்டார். ஞானத்தைக் கற்று அதில் தேர்ச்சியடைய வேண்டும் என்ற ஆவல் தேவ வெளிப்பாட்டின் அடிப்படையில் இராவிட்டால் அதற்கு எந்த மதிப்பீடும் கிடையாது (2:6). **நான் பவுலை சேர்ந்தவனென்றும் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும்** என்ற பிரிவினை வாதம் இருக்கும் வரை,

கொரிந்தியர்கள் ஆவிக்குரிய வளர்ச்சியில்லாதவர்களாகவே இருப்பார்கள் முன்னமே, பவுல் நான்கு பெயர்களைக் குறிப்பிட்டிருந்தார். “பவுல்,” “அப்பொல்லோ,” “கேபா,” மற்றும் “கிறிஸ்து” (1:12). தற்போது, கொரிந்தியர்களின் தேர்வு பவுல் அல்லது அப்பொல்லோவாக இருந்ததால் இங்கு அவர் மற்ற இரண்டு பெயர்களையும் குறிப்பிடவில்லை. பவுல் பேச்சில் வல்லவரல்ல (2 கொரி. 11:6). அப்பொல்லோ, சாதுரியவானும் வேதாகமங்களில் வல்லவனும் பேச்சில் வல்லவனும் ஆவான் (அப். 18:24). எப்படி கிறிஸ்து கொரிந்துவுக்கு சென்றிருக்க வாய்ப்பில்லையோ அதே போன்று கேபாவும் அங்கு சென்றிருக்க வாய்ப்பில்லை. கேபாவைக் குறித்து மறுபடியுமாக 1 கொரிந்தியர் 3:22ல் சொல்லப்படுகிறது, ஆனால் எந்த பிரிவினரையும் சார்ந்தவராக அல்ல.[2]

**சொல்லுகிறபடியால் நீங்கள் மாம்சத்திற்குரியவர்களல்லவா?** என் கடைசி கேள்வி, கிரேக்கர்களிடையே ஒரு மறை பொருளாகவே இருக்கிறது. மனித போதகர்களுக்கே அவர்கள் விசு வாசமாயிருந் தார்கள் என்பதை பவுல் வெளிப்படையாக சுட்டிக்காட்டினார், கிறிஸ்தவ மார்க்கமாக அல்லாமல் உலக மார்க்கமாகவே அவர்கள் நடந்து கொண்டார்கள். ஆவிக்குரியவர்களாயிராமல் முற்றிலும் மாம்சீகத்துக்கே அடிமைப்பட்டவர்களாக இருந்தனர் என்பதையே அவர்கள் நடத்தை வெளிக்காட்டியது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு அத்தியாவசியமான ஏக சிந்தையை அவர்கள் அவ மதித்தார்கள் (1:10).

**வசனம் 5.** கிரேக்க மொழியில், யார் என்ற ஆண்பால் வினாசுட்டு பெயர் சொல்லுக்கு பதிலாக, ஆண் பெண்பான்மை குறிக்கப்படாத (τίς, *tis* “என்ன” [வாட்]) என்ற பெயர் சொல்லையே பொதுவாக பயன்படுத்துவார்கள். **பவுல் யார்? அப்பொல்லோ யார்?** என்று ஆண்பால் பெயர் சொல்லையே பவுல் பயன்படுத்தியிருக்க வேண்டும் என்று வேதத்தை வாசிப்பவர்கள் எதிர்பார்க்கலாம், எனினும் (தமிழில் அல்லாது பிற மொழிகளில்) பவுல், “பவுல் என்ன?” “அப்பொல்லோ என்ன?” என்ற ஆண் பெண்பான்மை குறிக்கப்படாத பெயர் சொல்லையே பயன்படுத்தி யிருக்கிறார். அந்த இரு போதகர்கள் செய்த வேலைக்கே முக்கியத்துவம் கொடுக்கும் வண்ணமாக, பவுல், பொதுவான பெயர்சொல்லை பயன்படுத்தி இருக்கிறார் போலும்.[3] கொரிந்தியர்கள், யாரைக் குறித்து போதிக்கபடுகிறாரோ, அவரை விட்டு போதகர்களையே முற்றிலும் சார்ந்திருந்தனர். சபையின் தன்மையைக் குறித்தும் அதன் தலைவர்களை குறித்தும், அடிப்படையாகவே தவறான நோக்கம் கொண்டிருந்ததே பிரச்சனைக்கு காரணம், இங்கு போதகர்களின் பங்கே கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.[4]

***நீங்கள் விசுவாசிகளாவதற்கு*** காரணமாக இருந்த

வேலையாட்களே, போதகர்கள், என்பதை பவுல் வலியுறுத்தினார். கிறிஸ்துவுக்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் சேவை செய்வது என்பது ஒரு உன்னதமான காரியமாகும்; ஆனால் கிறிஸ்தவர்கள் போதகர்களை உயர்ந்த பீடங்களில் ஏற்றி, அவர்களை சார்ந்து பிரிவினைவாதங்களை ஏற்படுத்துவது என்பது, போதகர்கள் தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தை அவமதிக்கின்றனர். இப்படிப்பட்ட விஷயங்கள் வல்லமையான போதகர்களை பவுலுக்கும் அப்பொல்லோவுக்கும் நேரிட்டதே ஆனால், தற்கால சிறிதளவே சாதிக்க முடிகின்ற போதகர்களின் விஷயத்தில் இது எத்தனை அதிகமாக இருக்கும்!

பவுலுக்கு தேவனோடு கொண்டிருந்த உறவு, அவர் தேவனுக்கு “அடிமை”யாக இருந்தார் (δοῦλος, *doulos*); ஆனால் சபையோடு அவர் கொண்டிருந்த உறவு, அவர் ஒரு பணியாளராக அல்லது ஊழியன் (διάκονος, *diakonos*) ஆக இருந்தார். எல்லோரும் தலை வணங்கும் தேவனுக்கு முன்பாக, அவரோ அல்லது அப்பொல் லோவோ தங்களை முதன்மைப் படுத்தினது கிடையாது என்பதை பவுல் தெளிவுபட கூறினார். ஒவ்வொருவருக்கும் (பவுலுக்கும் அப்பொல்லோவுக்கும்) **அவரவருக்கு** நியமிக்கப்பட்ட வழியிலே சேவை செய்யும்படி தேவன் நியமித்திருக்கிறார். இருவருமே தங்களுக்கு விசுவாசமுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்பியதில்லை. பவுலும் அப்பொல்லோவும் உடன் வேலையாட்களாய் தேவனோடு எவ்வாறு இணைந்திருந்தார்களோ அந்தபடியே கொரிந்திய கிறிஸ்தவர்கள் இணைந்திருக்க வேண்டும். கௌரவம் அல்ல, சேவையே கிறிஸ்தவர்களின் முதிர்ச்சிக்கு அடையாளமாகும்.

**வசனம் 6.** சபையில் போதகர்களின் பங்கை தெளிவுபடுத்த, விவசாயத்திலிருந்து ஒரு எடுத்துக்காட்டை கூறியுள்ளார். கொரிந்தியர்களுக்கு கிறிஸ்துவைப் பற்றி முதன் முதலில் போதித்தது பவுல், துளிர்விட்ட விசுவாசத்தை ஊட்டமளித்து வளர்த்தது அப்பொல்லோ. **நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப் பாய்ச்சினான்.** என்று பவுல் கூறினார். இவர்கள் இருவருடைய வேலையும் ஒன்றோடு ஒன்றாக இணைந்திருக்கிறது. பவுல், அப்பொல்லோவுக்கு தகுந்த மதிப்பைக் கொடுத்தார். இருவருக்கும் இடையே போட்டி இருந்ததாக பவுலின் வசனங்கள் சிறிதளவேனும் வெளிப்படுத்தவில்லை. ஆத்துமாக்கள் ஆதாயப்படுத்தப்படும் இடத்தில், **தேவனே** அந்த வளர்ச்சிக்கு காரணர். கொரிந்தியர்கள், தேவனுடைய இரண்டு ஊழியர்களை சார்ந்து பிரிந்திருந்தது ஒரு முட்டாள்தனமான செயலாகும். கிறிஸ்துவே மகிமைப்படும்படி, மனித மதிப்பீடுகளை நஷ்டமென்றெண்ணி, பின்னணியத்தில் மறைந்திருக்க இவ்விரு அப்போஸ்தலர்களும் ஆவலுள்ளவர் களாயிருந்தனர் (பிலி. 3:8, 9).

**வசனம் 7.** பவுலும் அப்பொல்லோவும் நிலத்தில் வேலை செய்யும்

கூலி ஆட்களாயிருந்தனர், கொரிந்து சபை பண்ணையாக இருந்தது. மண்ணை பண்படுத்தி, விதை விதைத்து, நீர் பாய்ச்சி, அதற்கு ஊட்டமளிப்பதை மாத்திரமே போதகர்களால் செய்ய முடிந்தது. இந்த முயற்சிகளை, பூமிக்கடியில் விதை முளைத்து வெளியே துளிர் விடும் அற்புதமான கிரியையோடு ஒப்பிடும் போது அவை சற்று வலுவற்றதாகவே இருக்கிறது. ஊழியர்கள் ஒதுங்கி விடுகின்றனர்; **தேவனே விளையச்செய்தார்**. சபையான சிலுவையின் வடிவமைப்பை உடையதாக இருக்கிறது (1 கொரி. 2:2), ஏனென்றால் சிலுவையில் வெளிப்பட்ட கிருபையின் உபதேசத்தினாலேயே ஆண்களும் பெண்களும் இரட்சிக்கப் படுகின்றனர்.

**வசனம் 8.** பவுல், அப்பொல்லோ மற்றும் தேவ வார்த்தையை உண்மையுடன் போதிக்கும் அனைவரின், சிந்தனை, இருதயம் மற்றும் செயல்கள் அனைத்தும் **ஒரே** மனப்பாங்குடையதாகவே இருக்கும். NRSV ஆங்கில வேதாகமம் இந்த கருத்தை தெளிவாக கூறுகிறது: நடுகிறவனும், நீர் பாய்ச்சுகிறவனும் ஒரே செயல் நோக்கம் உடையவர்களாயிருப்பர். அதே சமயத்தில், அவரவருக்குரிய தனித்திறமை படைத்தவர்களாய் தனித் தன்மையோடு விளங்குகின்றனர். சபையின் வளர்ச்சிக்கு அவரவர் தங்கள் தங்கள் பங்கை அளிக்கின்றனர். முடிவில், தேவனே ஒவ்வொருவருடைய இருதயங்களை ஆராய்கிறவராய் இருப்பார். **அவனவன் தன்தன் வேலைக்குத் தக்கதாய்க் கூலியைப் பெறுவான்.** கொரிந்திய கிறிஸ்தவர்கள், பவுல், அப்பொல்லோ மற்றும் தங் களுக்கு சத்தியத்தைப் போதித்த மற்றவர்களையும் பாராட்டியது ஒரு நல்ல காரியம்; பிரிவினை உண்டாகும் அளவிற்கு அவர்களை ஒப்பிட்டு பார்த்ததென்பது ஏற்புடையது அல்ல. சொந்த விருப்பு வெறுப்பின் அடிப்படையில் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் ஒரு மனப்பாட்டை குலைப்பது எந்த வகையிலும் ஒத்துக் கொள்ளக்கூடியது அல்ல.

பவுல், தன்னைக்குறித்தும், அப்போல்லோவைக் குறித்தும், அது சம்பந்தப்பட்ட பிறரைக்குறித்தும், அவனவன் "தன் பங்கை பெறுவான்" (காண்க 3:14) காண்க என்று எழுதியிருப்பது எதிர்பாராத ஒன்றாகும். இங்கே, கிரேக்க மொழியில் (μισθός, *misthos*, பணிக்கு அமர்த்தப்பட்ட வேலையாளுக்கு கொடுக்கும் "கூலி" மிஸ்தோஸ், கூலி என்று நியு அமெரிக்கன் ஸ்டான்டர்ட் பைபிளிலும் [NASB], அல்லது "கூலிகள்" என்று நியு இன்டெர் நேஷனல் வெர்ஷன் பைபிளிலும் [NIV] ரோமர் 4:4) மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. கூலி என்பது, செய்த வேலைக்குக் கொடுக்கப்பட்டும் ஊதியம் என்று பொருள்படும், அஞ்ஞானிகள் இரட்சிப்படையும் போது, அதற்காக உழைத்தவர் களுக்கு பிச்சை போடுவது போல கூலி தருபவர் நம் தேவன் அல்ல என்பது பவுலின் கருத்தாகும். தேவனின் சுவிசேஷத்தை பிரசங்கியாமல் தன்னால் இருக்க முடியாத ஒரு தகுதியற்ற ஊழியனாகவே பவுல் தன்னைக்

கண்டார் (1 கொரி. 4:1; 9:16; 1 தீமோ. 1:15; காண்க லூக். 17:10ஐ). கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவனுடைய "விசுவாசமே அவனுக்கு நீதியாக, நன் மதிப்பாக வழங்கப்படுகிறது" (ரோமர் 4:3; NIV). மனிதனுடைய நன் மதிப்பு அறவே இல்லாத ஒரு நிலையில் அருளப்படும் கிருபையைக் குறித்தே பவுல், தொடர்ச்சியாக பிரசங்கித்து வந்தார், மனிதனுடைய பொறுப்பைக் குறித்து அழுத்திக்கூறுவதில் பவுல் வெட்கப்பட்டதே இல்லை. தோட்டத்தில் ஒரு நேரம் மட்டுமே வேலை செய்தவர்களுக்கு எவ்வண்ணமாக கூலியை தேவன் கொடுத்தாரோ (மத். 20:8) அதே வகை கூலியை மனதில் வைத்துதான் பவுல் பேசுகிறார். மெச்சத்தக்க கிரியையின் அடிப்படையில் அல்லாது, கிரியையினால் வரும் விசுவாசத்தின் பேரிலேயே நியாயமான கூலி வழங்கப்படும் (ரோமர் 2:13).

**வசனம் 9.** இவ்வசனத்தின் முதல் பகுதியில், கிரேக்க மொழியில், தேவனால் என்று வேற்றுமை உருபு பயன்படுத்தப் பட்டுள்ளது (3:9), இலக்கிய ரீதியாக இதன் பொருள் தேவனைக் கொண்டு நாங்கள் உடன் வேலையாட்களாயிருக்கிறோம், ஆகையால் இங்கு தேவனுக்கே கூடுதல் முக்கியத்துவம் கொடுக்கப் பட்டிருக்கிறது. எல்லா கிறிஸ்தவ பணிகளின் மையப்புள்ளியாக தேவனே இருக்கிறார் என்பதை பவுல், தெளிவாக கூறியுள்ளார். இந்த கருத்துக்கு ஒப்புமையாக, பவுலும் அப்பொல்லோவும் அவரவர் தகுதிக்கு ஏற்ப சாதாரண ஊழியர்களாக இருப்பினும், அவர்கள் **தேவனுடைய உடன் வேலையாட்கள்** ஆக இருந்தனர். கிறிஸ்துவின் ஊழியன் ஒருவன், தேவனோடு தனக்கு இருக்கும் உறவின் அடிப் படையிலேயே அவனது தனித்தன்மையைப் பெறு கிறான். தனது ஆற்றலுக்கு முக்கியத்துவம் கொடுக்கவோ அல்லது தனக்கே கனத்தை தேடிக்கொள்ளவோ அங்கே இடமே இராது. சரீரமாகிய சபை இயல்பாகவே ஒன்றாக இருக்கிறது. "கொரிந்தியர்கள் தேவனுடைய பண்ணையும், மாளிகையுமாயி ருந்தார்கள்." ஏற்கெனவே பவுல் கொரிந்தியரை **தேவனுடைய பண்ணை** என்ற உபமேய அணியிலிருந்து **தேவனுடைய மாளிகை** என்று உபமேயப்படுத்தியிருந்தார் (3:10-17) உடன் வேலை யாட்கள், பண்ணை மாளிகை போன்ற உபமேய அணிகளைப் பவுல் கூறுவதை, இதை வாசிப்பவர்கள் அவற்றை மிகவும் விரிவாக அறிந்து கொள்ள வேண்டும் என்று அவர் எண்ணவில்லை. தேவனுடைய ஊழியக்காரர்கள் ஒர் குறிப்பிட்ட பணியின் மீது மாத்திரம் அதிக அளவு முக்கியத்துவம் கொடுக்காமல், எதைச் செய்தாலும் தேவனை மகிமைப்படுத்துவதற்காகவே செய்ய வேண்டும் என்று கூறுகிறார். அவர் கூறுவதிலிருந்து சரீரமாகிய சபையின் ஒருமைப்பாட்டையே முக்கியப்படுத்திக் காட்டுகிறார் என்பது தெளிவாகிறது.

## தேவனுடைய கட்டிடம்; தேவனுடைய ஆலயம் (3:10-17)

அப்பொல்லோவும் தானும், கொரிந்தியர்களுக்கு செய்த ஊழியத்தை கருத்தில் கொண்டவராக, ஒவ்வொரு விசுவாசியும் சபையின் வளர்ச்சிக்காகவும் ஒற்றுமைக்காகவும் பாடுபட கிருபையே ஆதாரம் என்பதை பவுல் அருள் நயத்துடன் கூறுகிறார். இதில், போதகர்களுக்கு மட்டும் அல்லாது முழு சபைக்கும் பங்கு உண்டு என்பதை பவுல் சுட்டிக் காட்டுகிறார். சபையில் தன்னுடைய பங்கு என்ன என்பதையும், சபை மேம்படுவதற்கு தன் பணி என்ன என்பதையும் ஒவ்வொரு கொரிந்திய கிறிஸ்தவனும் ஆய்வு செய்ய வேண்டியது அவசியமாக இருந்தது. சபையை வெறும் ஒரு கட்டிடத்திற்கு ஒப்பாக பார்க்க முடியாது என்பதை இறுதியாக அவர்களுக்கு கூறினார். உண்மையில், கிறிஸ்தவன் சபை தேவனுடைய ஆலயமாக விளங்குகிறது. அதின் பிரகாரங்களில் தேவன் வாசம் செய்கிறார்.

### “எப்படி கட்டுகிறோம் என்பதில் கவனம் அவசியம்” (3:10-15)

**10எனக்கு அளிக்கப்பட்ட தேவகிருபையின்படியே புத்தியுள்ள சிற்பாசாரியைப்போல அஸ்திபாரம் போட்டேன். வேறொருவன் அதின் மேல் கட்டுகிறான். அவனவன் தான் அதின்மேல் இன்னவிதமாய் கட்டுகிறானென்று பார்க்கக்கடவன். 11போடப் பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது. 12ஒருவன் அந்த அஸ்திபாரத்தின் மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால், 13அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப் படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ள தென்று அக்கினியானது பரிசோதிக்கும். 14அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான். 15ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினது போலிருக்கும்.**

**வசனம் 10.** அப்பொல்லோவும் பவுலும் கிறிஸ்துவுக்கும் அவரது சபைக்குமே சேவை செய்தனர் என்பதை, வேளாண்துறையையும் கட்டிடக் கலையையும் உருவகமாக கொண்டு, கிறிஸ்தவர்கள் புரியும் படியாக விளக்கினார். இருவரும் தன்னிச்சையாக செயல்படவில்லை. கிறிஸ்தவர்கள் யாரேனும் ஒரு மனிதனுக்கு விசுவாசம் காட்டுவதென்பது தேவனை அவமதிப்பதற்கு சமமாகும். தேவ

ஊழியர்கள் பணி செய்யும் இடமே சபையாகும்.

வேறு கோணத்தில் நோக்கும் பொழுது, சபையானது தேவனுடைய கட்டிடமாகும். நிலத்தை உருவகமாகக் கொண்டு, அப்பொல்லோவும் தானும் செய்த பணியின் சில அம்சங்களை கூற இயலாதவற்றை, கட்டிடம் என்ற உருவகத்தை பயன்படுத்தி பவுலால் கூற முடிந்தது.

தேவ கிருபையால், கொரிந்து சபைக்கு பவுல் **அஸ்திபாரமிட்டார்**. பவுல், தனக்குத் தானே கொடுத்த பதவி ஆர்க்கிடோன், ἀρχιτέκτων (*architektōn*) இரு "பிரதான கைவினைஞர்."[5] கட்டிட கலைஞர் என்ற உருவகத்தைக் கருத்தில் கொண்டால், பவுல் கொரிந்து சபைக்கு அஸ்திபாரமிட்டவராவார். அப்பொல்லோ அந்த அஸ்திபாரத்தின் மேல் கட்டினார். அவர் அதை நன்றாகவே கட்டினார், இருப்பினும் பிறருடைய பகிர்ந்தளிப்பும் எதிர்பார்க்கப்பட்டது. சிலர் ஞானமாய் கட்டலாம்; வேறு சிலர் கனவீனமாகவோ அல்லது தரம் குறைந்த பொருட்களினாலோ கட்டலாம். அந்த வேளையில் அப்போஸ்தலர் மற்றவர்கள் எவ்வாறு கட்டினார்கள் என்று கவனிக்க, தமக்கும் அப்பொல்லோவுக்கும் அப்பால் கடந்து போகவிரும்பினார். ஒருமைப்பெயர் உரிச்சொல்லையும் நிகழ்கால வினையையும் அவர் பயன்படுத்தி, தாம் இட்டிருந்த அஸ்திபாரம் பற்றி எழுதினார், **வேறொருவன் அதின் மேல் கட்டுகிறான்**.

பவுல் தம் மனதில் கொண்டிருந்த பணியாளர் அப்பொல்லோ அல்ல என்பது தெளிவு. அப்பொல்லோ அப்போது அந்த நகரில் இருக்கவில்லை (1 கொரி. 16:12). கொரிந்து நகரில் இருந்த. பெயர் அறியப்படாத வேறொரு போதகரைப் பவுல் இங்கு குறிப்பிட்டதாக காணப்படுகிறது, அந்த போதகர் சபையில் பிரிவினையை வளர்க்க அப்பொல்லோவின் பெயரைப் பயன்படுத்தி இருக்கலாம். அந்த நபரைக்குறித்து பவுல், ஒவ்வொரு மனிதரும் தாம் எப்படிக் **கட்டுகிறோம்** என்பதில் எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்று எச்சரித்தார். ஒரு போதகரென்று தன்னை யூகித்துக் கொள்ளும் எவரும், தமக்கும் சபைக்கும் துன்பம் தரும் செயல் எதையும் செய்யக்கூடாது. யாக்கோபு போன்றே பவுலும், கிறிஸ்தவ போதகராயிருக்க விரும்பும் எவர் ஒருவரும், தாம் மேற்கொள்ளும் பொறுப்பு பற்றி கவனமாயிருக்க வேண்டும் என்று எச்சரித்தார் (காண்க யாக். 3:1ஐக்).

**வசனம் 11.** "சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்து" என்ற போதனையே, கொரிந்து நகரில் பவுல் போட்டிருந்த அஸ்திபாரமாக இருந்தது (2:2). போதகர்கள்மேல் கொண்ட பற்றுறுதியின் அடிப்படையில் பிரிவினையை விளைவிக்கின்ற மேல்கட்டுமானத்தைக் கட்டச் செய்யப்படுகிற எந்த ஒரு முயற்சியும், பவுல் போட்டிருந்த அஸ்திபாரத்தை விட்டு வேறே அஸ்தி பாரம் போடுகிற முயற்சியாயிருக்கும். கொரிந்தியர்கள் அனுபவித்துக்கொண்டிருந்த பிரிவினையானது, தொடக்க கால மேல்கட்டுமானத்தை மறுத்தலைச்

சுட்டிக்காட்டியது. ஜீவன், இரட்சிப்பு மற்றும் நம்பிக்கை ஆகியவற்றைக் கண்டறிய நோக்கங்கொண்ட எந்த மனிதரும், **போடப்பட்டுள்ள அஸ்தி பாரத்தைத்தவிர** வேறே **அஸ்திபாரத்தைப் போட** முடியாது. மனித ஞானத்தைச் சார்ந்திருத்தல் என்பது, கிறிஸ்துவின் சரீரத்தைப் பிரித்தலாகவும், பவுலினால் போடப்பட்ட அஸ்திபாரத்தை மறுத்த லாகவும் இருந்தது; சாராம்சத்தில் இது கிறிஸ்துவை மறுத்தலாக இருந்தது. கிறிஸ்துவின் சபையாக இருக்க விருப்பம் கொண்டுள்ளவர்களுக்கு, போட்டி அஸ்திபாரங்கள் என்பவை கேள்விக்கு அப்பாற்பட்டவையாக உள்ளன.

**வசனம் 12.** கொரிந்துவில் இருந்த கிறிஸ்துவின் சபைக்கு பவுல். அஸ்திபாரம் போட்டிருந்தார். அதாவது, கிறிஸ்தவ உபதேசத்தின் அடிப்படைகளை அவர்களுக்கு அவர் போதித்திருந்தார். பாடுகள்பட வேண்டியவராயிருந்த ஒரு மேசியாவைக் குறித்து, தேவனுடைய வாக்குத்தத்தங்களை அவர்கள் கற்றிருந்தனர், அந்த வாக்குத்தத்தத்தின் நிறைவேற்றமாக இருந்தவர் கிறிஸ்துவே என்று அவர்களுக்குப் போதிக்கப் பட்டிருந்தது (லூக். 24:46, 47; அப். 17:3). இந்த அடிப்படைகளுக்கு அப்பால், கிறிஸ்தவர்கள் வளர்ந்திருக்க வேண்டும் என்று பவுல் வலியுறுத்தினார். விசுவாசம் மற்றும் உண்மைத்தன்மையில் வளருதல் என்பதுபற்றி அவர், பிள்ளைகள் பலமான ஆகாரத்தினால் போஷிக்கப்படுதலின் அவசியம் (1 கொரி. 3:2), ஆழமாய் வேரூன்றிய தாவரங்களுக்கு நீரூற்றுவதன் அவசியம் மற்றும் திடமான அஸ்திபாரம் தேவைப்படுகிற ஒரு கட்டிடம் ஆகிய ஒப்புவுவமைகளைப் பயன்படுத்திப் பேசினார். கொரிந்துவில் இருந்த சபையின் அஸ்திபாரம் தக்கவகையில் போடப்பட்டது என்று திட நம்பிக்கையுடன் அவரால் கூற முடிந்தது, ஆனால் அந்த அஸ்திபாரத்தின் மீது கட்டப்பட்ட செயல்முறை நன்கு செய்யப்பட்டது என்று திடநம்பிக்கையுடன் அவரால் இருக்க முடியவில்லை. கொரிந்துவில் போதனையும் நடைமுறையும் கட்டு மானப்பொருட்களின் இருவேறு பட்ட வகைமுறையாக இருந்தன. சிலர் ஆரோக்கியமான உபதேசத்தைக் கைக்கொண்டு தேவனுக்கு மகிமையாக விளங்கிய அதே வேளையில், மற்றவர்கள் நன்மை எதையும் வாக்களிக்கவில்லை.

கட்டுமானப்பொருட்கள் பற்றிய அப்போஸ்தலரின் ஒப்புவுவமை, அளவுக்குமீறி வலியுறுத்தப்படலாகாது. நல்லதொரு கட்டிடத்தைக் கட்டுவதற்கு, கற்கள் மற்றும் மரம் ஆகியவற்றைக் காட்டிலும் பொன்னும் வெள்ளியும் நடைமுறைக்கு உகந்தவையாக இருப்பதில்லை. பவுலின் ஒப்புவுவமையானது. ஒரு கட்டிடத்தின் வடிவமைப்புக்கு என்பதைக்காட்டிலும் அதிகமாக அதன் வனப்பிற்கும் கிருபைக்கும் முக்கியத்துவம் கொடுத்தது பொன், வெள்ளி மற்றும் விலையேறப்பெற்ற கற்கள் ஆகியவற்றைக் கொண்டு

கட்டப்பட்டிருப்பினும், கட்டிடத்தின் கட்டமைப்பு உறுதியானது என்று கட்டிடக்கலைஞர் ஒருவர் தாமே திருப்தியடையாத வரையில், அவர் அதை மதித்துப் போற்றுவது சாத்தியமில்லை. கிறிஸ்துவின் அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டது மனிதன் அளிக்கக்கூடிய விலைமதிப்புமிக்க எந்தப்பொருளைக் காட்டிலும் அதிக தகுதி வாய்ந்தது என்று பவுல் சுட்டிக் காண்பித்தார். தேவனுடைய மகிமைக்கென்று கட்டுதல் “பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்கள்” ஆகியவற்றினால் கட்டுதலாக உள்ளது. கிறிஸ்துவின்மேல் என்பதற்குப்பதிலாக, பவுல் அல்லது அப்பொல்லோவின் மேல் கொண்ட பற்றுறுதியின்மேல் கட்டுதலானது, பிரிவினையைப்பேசும் மனிதஞானத்தின் வழியே செல்லுதலாக இருந்தது, இது அண்டத்தின் கர்த்தருடைய பார்வையில் அற்பமானதாக உள்ள **மரம், புல், [அல்லது] வைக்கோல்** என்ற அரைகுறையான பொருட்களைக் கொண்டு கட்டமைத்தலாக இருந்தது. சபைக்கு எதிராக உலகம் எதைக்கொண்டு வந்தாலும் எதிர்த்து உறுதியாக நிலைநிற்கும் ஆவிக்குரிய பொருள்களைக்கொண்டு, கிறிஸ்து தமது சபையைக் கட்டினார். மனிதர்கள் தங்கள் விருப்பப்படி சபையை மாற்றி அமைக்கும்போது, அதன் விளைவாக உண்டாகும் கட்டமைப்பானது, கீழே தள்ளப்படும் அல்லது எரிக்கப்படும் என்று பவுல் அறிவித்தார். சபைக்குள் உள்ள தனித்தனி உறுப்பினர் அல்ல, ஆனால் சபை முழுமையுமே பவுலின் கருத்துப் பொருளாக இருந்தது. தனிநபரான கிறிஸ்தவர்கள் தங்கள் சுயநீதியினால் இரட்சிக்கப்படுவதில்லை. எல்லாருக்குமே தேவனுடைய கிருபை தேவைப்படுகிறது. எல்லாருமே ஓரளவுக்கு “மரம்,” “புல்” அல்லது “வைக்கோல்” என்பதைக்கொண்டுள்ளனர்.

பவுல் தாம் இட்டிருந்த அஸ்திபாரத்தின்மேல் கட்டுதலில் கவனமாயிருக்க வேண்டும் என்று வற்புறுத்திய போது, தேவனுடைய மக்களின் சமூகமான சபையைக்குறித்துப் பேசிக் கொண்டிருந்தார். கொரிந்துவில் இருந்த சபையைக்குறித்து அவர் கூறியவை, எங்குமுள்ள சபைக்குழுமங்களுக்கு அல்லது உலக ளாவிய சபைக்கு, சம அளவு செயல்விளைவு கொண்டவை என்று கூறப்பட முடியும். தனிநபரான கிறிஸ்தவர், கிறிஸ்துவுக்குள் தொடக்க மனமாற்றம் அடைந்தபின்னர், கவனமாகக் கட்டியெழுப்புதல் பாராட்டத்தக்கதே என்றாலும், இந்த சந்தர்ப்பப் பொருளில் பவுல், தனிநபர்கள் சொந்த விசுவாசத்தைக் கட்டியெழுப்பும் வழிமுறை பற்றிப் பேசவில்லை.

**வசனம் 13.** 3:12ல் பவுல், “ஒருவன் அந்த அஸ்திபாரத்தின்மேல் ... ஆகிய இவைகளைக்கொண்டு கட்டினால் ...” என்று கூறி ஒரு நிபந்தனை வாக்கியத்தைத் தொடங்கினார். அவர், சாத்தியக் கூறுகள் சிலவற்றைப் பட்டியலிட்ட பின்னர், இப்போது சிந்தனையைக் கூறிமுடிக்கத் தயாரானார். கட்டுமானப்பணியாளர் ஒருவரின் வேலையானது உடனடியாக தெளிவாய்க் காணப்படாதிருப்பினும்,

நாளானது ஒவ்வொருவரின் **வேலையின்** தரத்தையும் **தெளிவாய்** எடுத்துக்காட்டும். இவ்வகையான கிரேக்க நிபந்தனை வாக்கியம் ஒன்றில், புரோட்டாசிஸ் ("ஆல்" என்ற விகுதி) உண்மையானது என்று யூகிக்கப்படுகிறது. கொரிந்து நகரில் இருந்த போதகர்கள் உண்மையில், பவுல் இட்டிருந்த அஸ்திபாரத்தின்மேல், பல்வேறு வழிகளில் கட்டினர். நாளானது, ஒவ்வொரு மனிதரும் கட்டினதை **அக்கினியைக்கொண்டு வெளிப்படுத்தும்**. தேவன் தேர்ந்துகொண்ட **நாளிலே**, ஒவ்வொரு மனிதருடைய **வேலைப்பாடும்** பரிசோதிக்கப்படும்.

பவுலின் எச்சரிப்பினுடைய பரந்த வரைகுறிப்பு தெளிவாக உள்ளது, ஆனால் அவரின் வார்த்தைகளை ஒருவர் கவனத்துடன் பரிசோதனை செய்யும்போது, அவரது வாதம் கூடுதல் ஏற்புடைத்தன்மையைப் பெறுகிறது. உதாரணமாக, "அது அக்கினியிலே வெளிப்படுத்தப்படும்" என்ற சொற்றொடரில், "அது" என்ற பிரதிப்பெயர்ச்சொல்லின் முந்தைய குறிப்பு எது என்பதைத் தீர்மானிப்பது கடினமாக உள்ளது. அக்கினியிலே வெளிப்படுத்தப்படுவது என்ன? ஒவ்வொரு நபரின் செய்கையும் அக்கினியிலே வெளிப்படுத்தப்படும் என்பது இங்கு கருத்தாக இருக்கலாம், அல்லது அந்த நாளானது அக்கினியிலே வெளிப் படுத்தப்படும் என்று பவுல் அர்த்தப்படுத்தியிருக்கலாம். இவ்விரு கருத்துக்களுமே இவ்விடத்தின் சந்தர்ப்பப் பொருளுக்கு பொருந்துவதாக இருக்கின்றன; ஆனால், அக்கினி என்பது பொதுவாக நியாயத்தீர்ப்பு நாளுடன் இணைவுகொண்டிருப்பதால் (உதாரணமாக, 2 தெச. 1:7; எபி. 10:27 ஆகியவற்றைக் காணவும்), உலகளாவிய நியாயத்தீர்ப்புக்கு கர்த்தர் திரும்பி வரும் நாளானது அக்கினியுடன் இணைந்திருக்கும் என்று அப்போஸ்தலர் இங்கு கூறியிருக்க வாய்ப்புள்ளது. அக்கினி அசுத்தங்களைக் களைந்து போடுவதுடன் உண்மையானவர்களை அதிக மகிமைக் குரியவர்களாகவும் அதிக பெலவான்களாகவும் ஆக்கி விடுகிறது.

"அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும் நாள்" என்பது, கர்த்தர் திரும்ப வரும் நாளே என்று சொல்வது பொருத்தமே ஆனால் இன்னொரு சாத்தியக்கூறும் உள்ளது. சபை சோதனைகளை எதிர்கொள்ளும் காலங்களை இவ்விடத்தில் அப்போஸ்தலர் குறிப்பிட்டிருக்கலாம். "அக்கினி" என்பது இவ்வாழ்க்கையில் சோதனை என்பதன் ஒப்புவுவமையாகவும் உள்ளது (காண்க 1 பேதுரு 1:7ஐக்). சோதனை என்பது தேவ பக்தியற்றவர்களால் ஏவப்பட்ட உபத்திரவங்களிலிருந்து, கள்ளப்போதகர்களால் முன்வைக்கப்பட்ட அறை கூவல்களிலிருந்து அல்லது கிறிஸ்தவர்களுக்குள் ஏற்படும் வழக்குகளிலிருந்து வரலாம். கிறிஸ்து என்ற அஸ்திபாரத்தின் மீது ஒருவர் எழுப்புகிற கட்டிடத்தின் வகையானது, இவ்வுலகில் விசுவாசிகள் தங்களுக்கு வரும் சோதனைகளை சகிக்கக்கூடிய

திறனுக்குப் பங்களித்தல் அதிகமாக உள்ளது. இவ்விடத்தில் பவுல், வைக்கோல், மரம் மற்றும் செங்கல்6 கொண்டு தங்கள் வீடுகளைக் கட்டிய மூன்று பன்றிகள் பற்றிய குழந்தைக்கதையில் இருந்து பெரிதும் மாறுபட்டிராத ஒரு கருத்தை கூறியிருப்பதைக் காண்கிறோம்.[6] அந்தக்கதையில், ஒரு நாள் ஒவ்வொரு பன்றியின் வாசல் முன்பாகவும் நரி ஒன்று வந்து நின்றது; இந்த சோதனை நாள், அவைகள் பயன்படுத்தியிருந்த கட்டுமானப்பொருட்களின் தரத்தை வெளியாக்கிற்று. அது போன்றே கிறிஸ்தவத் தனிநபர்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் மற்றும் அவர்கள் அங்கம் வகிக்கிற சபைக் குழுமங்களுக்கும் சோதனையின் நாட்கள் வருகின்றன. தனிநபர்கள், இல்லங்கள் மற்றும் சபைகள், தாங்கள் கட்டியெழுப்பிய விசுவாசத்தின் அளவு மற்றும் ஆவியானவரின் வெளிப்பாட்டின் மீதான நடக்கையின் அளவு ஆகியவற்றிற்கு ஏற்ற பலத்துடன், இந்த சோதனையின் நாட்களில் நிலைநிற்கும். தேவனுடைய வெளிப்பாட்டை அறிந்து அதற்குக்கீழ்ப்படிகிறவர்கள், தங்கள்மீது சோதனைக்காரன் வீசியெறியும் எந்த சோதனைக்கும் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்கின்றனர்.

**வசனம் 14.** முன்னதாகப் பவுல், சுவிசேஷ விதைகளை விதைத்திருந்தவர்கள் மற்றும் அதற்கு நீரூற்றி போஷித்தவர்கள் ஆகிய இருவருக்கும் கிடைக்கும் “பலன்” அல்லது “கூலி” பற்றி எழுதியிருந்தார் (3:8). “பலன்” என்ற வார்த்தையின் பயன்பாடு தவறான கூற்றாக இருந்ததில்லை. ஒவ்வொரு மனிதரின் வேலைப்பாட்டின் தரத்தையும் அக்கினி பரிசோதிக்கும்போது, திடமாகக் கட்டிய வேலைக்காரர்கள் தங்களுக்குரிய **பலனைப்பெறு வார்கள்**. பவுலின் சிந்தையில் ஓரளவு மன இறுக்கம் காணப்படுகிறது: இரட்சிப்பு என்பது தேவனுடைய கிருபையைப் பொறுத்த விஷயமாக உள்ளது (எபே. 2:8), ஆனாலும் பாவிகளின் அன்பும் விசுவாசமும் அவர்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிதலை விளைவிக்கும்போது அவர்கள் மீது தேவன் தமது கிருபையை அபரி மிதமாகப் பொழிகிறார் என்பதும் உண்மையாகவே உள்ளது.

மரம், வைக்கோல் அல்லது புல் ஆகியவை ஏமாற்று வேலையாக இருக்கலாம், எனவே அது நன்கு கட்டப்பட்ட அமைப்பு போல சற்றுகாலத்திற்கு தோன்றலாம். கட்டுமானப் பொருட்கள் பற்றிய பவுலின் எச்சரிக்கையை சபையானது கவனிக்கின்ற போது, அது நிலையான சுயபரிசோதனையில் ஈடுபட்டிருக்கும். சுயபரிசோதனைக்கான இடத்தைக் காண்பது கடினமல்ல. ஆராதிக்க ஒன்றுகூடுகிற சபைக்குழுமம், பொழுதுபோக்குவதில் ஈடுபாடு கொண்டுள்ளவர்களின் ஆவலைப் பூர்த்தி செய்கிறதா? தேவனைப்பற்றிய நமது உணர்வுகள், சத்தியத்தைப் பற்றிய நமது அக்கறையையும் கிறிஸ்தவ விசுவாசம் பற்றிய நமது அறிவையும்

மேம்படுத்துகிறதா? அப்போஸ்தலிக்க அஸ்திபாரத்தின்மேல் ஜாக்கிரதையாக கட்டவேண்டும் என்பதற்கான கிறிஸ்தவர்களின் தேவையானது, கொரிந்தியர்களுக்கு பவுல் எழுதிய நிருபத்துடன் முற்றுப்பெறவில்லை.

**வசனம் 15.** நியாயத்தீர்ப்பின் அக்கினி வரும்போது ஒவ்வொரு மனிதரின் வேலைப்பாடும் வெளியாகும், மரம், புல் மற்றும் வைக்கோல் ஆகியவற்றைக் கொண்டு கட்டியுள்ள போதகர்கள், தங்களது வேலைப்பாடுகள் பற்றிஎரிவதைக் காண்பார்கள். தேவனுடைய மகிமைக்கென்று வாழ்ந்திருக்கக்கூடிய நிலையில் இருக்கும் பலர், அதற்குப்பதிலாக இந்த உலகத்துடன் தங்களை இணைத்துக்கொள்ள தாங்கள் அனுமதித்து இருந்ததை உணர்வார்கள். அவர்களுக்குப் போதித்தவர்கள் சுயகுற்றச்சாட்டில் **நஷ்டம்** அனுபவிப்பார்கள்; அவர்கள், இழந்துபோன ஆத்துமாக்களை நித்தியவாழ்விற்க்குத் திரும்பக் கொண்டுவருவதில் தாங்கள், கர்த்தருக்கு உண்மை நிறைந்த பங்காளிகளாய் இருக்கத்தவறிப்போனதைக் கண்டறிவார்கள்.

இயேசுவைத் தங்கள் கர்த்தராக சொந்தம் கொண்டுள்ள வர்களின் உபதேசத்தில் உள்ளுறைந்து இருக்க வேண்டிய பொறுப்பு குறித்து எடுத்துரைக்க பவுல், குறைவான, பூமிக்குரிய விவரிப்பு ஒன்றைப் பயன்படுத்தினார் என்பதை வாசகர்கள் நினைவில் வைத்திருக்க வேண்டும். ஜேம்ஸ் டி. ஜி. டன் அவர்கள், "மற்றும் விசுவாசிகள் என்ற வகையிலும்கூட அவர்கள் வாழ்க்கைத்தரமானது, அவர்கள் மீசைமுடி போன்ற ஒரு அற்பமான விஷயத்தினாலேயே இரட்சிக்கப்பட்டிருந்தனர் என்பது போலிருந்தது"[7] என்று எழுதிய போது பவுலின் உருவகமொழி நடையின் முழுவிபரத்திற்கு குறைவாகவே கவனம் செலுத்தினார். "மீசைமுடி போன்ற ஒரு அற்பமான விஷயத்தினால்" இரட்சிப்பு என்று போதிப்பதற்குப் பதிலாக, அப்போஸ்தலர், மனித தவறுகளுக்கு தேவகிருபை சலுகையளிக்கிறது என்ற கருத்தைப் பராமரித்தார். உண்மையான நல்லெண்ணமும் ஆழமான விசுவாசமும் கொண்டுள்ள மக்களும் கூட சில வேளைகளில் தவறான தெரிவுகளைச் செய்கின்றனர். மிகச்சிறந்த விருப்ப நோக்குக் கொண்டுள்ளவர்களும்கூட தேவனுடைய மக்களைச் சேதப்படுத்தக் காரணமாகக்கூடும். மனிதர்களின் இருதயங்களை அறிந்திருக்கிற தேவன், தம் ஊழியர்கள் ஞானமின்றி செயல்படும்போதுகூட அவர்களை இரட்சிக்கிறார்.

